# சில வரிச் செய்திகள்!

## மேட்டூர் அணை நீர்வரத்து

## 15,232 கனஅடியாக அதிகரிப்பு!



மேட்டூர், ஜூலை 30-

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 15,232 கனஅடியாக இன்று மாலை அதிகரித்துள்ளது.

மேட்டூர் அணை நீர்மட்டம் 64.90 அடியிலிருந்து 65.01 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 12,444 கனஅடியிலிருந்து 15,232 கனஅடியாக அதிகரித்துள்ளது.

மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு வினாடிக்கு 12,000 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது.

அணையின் நீர் இருப்பு 28.56 டிஎம்சியாக உள்ளது.

## மணிப்பூர் வன்முறைக்கு எதிராக

## லண்டனில் அமைதிப் பேரணி!

லண்டன்,ஜூலை 30-

பிரிட்டனை மையமாக வைத்து செயல்படும் இந்திய வம்சாவளி பெண்கள் குழு மணிப்பூர் வன்முறைக்கு எதிராக அமைதி வழிப் போராட்ட பேரணியை மேற்கொண்டனர்.

அமைதி வழிப் பேரணியை வெளிப்படுத்தும் விதமாக இந்தக் குழு முகக் கவசம் அணிந்து பேரணியில் கலந்து கொண்டனர். லண்டனில் உள்ள இந்தியன் ஹை கமிஷன் முன்பு பதாகைகளை ஏந்தி நின்ற இந்தக் குழு பின்னர் அங்கிருந்து நாடாளுமன்ற வளாகத்துக்கு எதிராக உள்ள மகாத்மா காந்தியின் சிலை நோக்கிச் சென்று தங்களது இந்த அமைதியான பேரணியை முடித்துக் கொண்டனர்.

இந்த அமைதி வழி போராட்டம் தொடர்பாக இந்திய வம்சாவளி பெண்கள் குழு தரப்பில் கூறியதாவது: மணிப்பூரில் இரண்டு குகி இன சகோதரிகளை நிர்வாணமாக்கி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு கூட்டுப் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டதற்கு எதிராக இந்த அமைதி வழிப் பேரணியை நாங்கள் நடத்தியுள்ளோம். அந்த சகோதரிகளுடன் நாங்கள் உறுதியாக துணை நிற்கிறோம் எனக் கூறினர்.

மணிப்பூரில் குகி இனப் பெண்களுக்கெதிரான இந்த கொடூரம் குறித்து சிபிஐ விசாரணை மேற்கொள்ளும் எனவும், குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும் எனவும் அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானுக்கு

## ரூ.19,600 கோடி கடன் வழங்கிய சீனா!

இஸ்லாமாபாத், ஜூலை 30-

பாகிஸ்தான் கடுமையான பொருளாதார நெருக்கடியில் தத்தளித்து வருகிறது. அந்த நாட்டின் அன்னிய செலாவணி கையிருப்பு தீரும் நிலையில் உள்ளது. இந்த நிலையில் பாகிஸ்தானின் நெருங்கிய நட்பு நாடான சீனா, அந்த நாட்டுக்கு 2.4 பில்லியன் அமெரிக்க டாலரை (சுமார் ரூ.19 ஆயிரத்து 600 கோடி) கடனாக வழங்கியுள்ளது.

அடுத்த 2 நிதியாண்டுகளில் கடனை திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையில் கீழ் சீனா இந்த கடனை வழங்கியுள்ளதாக பாகிஸ்தான் நிதி மந்திரி இஷாக் தர் தெரிவித்துள்ளார். மேலும் இந்த 2 ஆண்டுகளிலும் கடனுக்கான வட்டியை பாகிஸ்தான் செலுத்தும் எனவும் அவர் கூறினார்.

## 1,20,000 ஆண்டுகளில் இல்லாத வகையில்

## நடப்பாண்டு ஜூலை மாதத்தில் அதிகளவு வெப்பம் பதிவு!

### ஆராய்ச்சியாளர்கள் அதிர்ச்சி தகவல்!



ஜெனிவா, ஜூலை 30-

1 லட்சத்து 20 ஆயிரம் ஆண்டுகளில் இல்லாத வகையில் அதிகளவு வெப்பமான மாதமாக இந்தாண்டு ஜூலை மாதம் பதிவாகியுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளனர். பூமியின் வடக்கு அரை கோலத்தில் வெப்ப அலை தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், 1,20,000 ஆண்டுகளில் இல்லாத வகையில் நடப்பாண்டு ஜூலை மாதத்தில் அதிகளவு வெப்பம் பதிவாகியுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இம்மாதம் பதிவாகிய உலக சராசரி வெப்பமானது ஐரோப்பிய யூனியன் தரவுகளின்படி 174 ஆண்டுகளில் அதிகபட்ச வெப்பம் பதிவான 2019 ஜூலை மாத வெப்ப அலையை விட புள்ளி 2 டிகிரி செல்சியஸ் அதிகமாக உள்ளதாகவும் கண்டுபிடித்துள்ளனர்.

### சீனாவுடனான

## இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை அதிகரிப்பு தடுக்கப்படுமா?

### மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 30-

சீனாவுடனான இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை அதிகரித்து கொண்டு வருவதைத் தடுக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர்கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்வி வருமாறு:-

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவின் ஏற்றுமதி சரிந்ததாலும், இறக்குமதி அதிகரித்ததாலும் இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை அதிகரித்தது என்பது உண்மையா? அப்படியானால், அதன் விவரங்கள்;

சீனாவுடனான வர்த்தகப் பற்றாக்குறை அதிகமாக உள்ளதா? இந்தியா பெறுவதை விட சீனா ஐந்து மடங்கு அதிகமாகப் பெறுகிறது என்பது உண்மையா? அப்படியானால், இது தொடர்பாக தற்போதைய போக்கு; சீனாவுடன் அதிக சார்பு நிலையைக் குறைக்க மத்திய அரசு முனைப்புடன் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறதா?

கடந்த ஐந்து ஆண்டுகளில் சீனாவுடனான இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை (INR மதிப்பு) விவரங்கள், ஆண்டு வாரியாக? தரப்படுமா என்று வினா எழுப்பி இருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகத்தில் ராஜாங்க அமைச்சர் திருமதி. அனுப்ரியா படேல் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவின் ஏற்றுமதி 36.6% அதிகரித்துள்ளது. 201819ல் 330.07 பில்லியன்



அமெரிக்க டாலரிலிருந்து 2022-23ல் 450.95 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. அதே நேரத்தில் இந்தியாவின் இறக்குமதி கடந்த ஐந்தாண்டுகளில் 38.8% அதிகரித்து 2018-19ல் 514.07 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து 2022-23ல் 714.04 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பெரும்பாலான பொருட்கள் மூலதன பொருட்கள், இடைநிலை பொருட்கள் மற்றும் மூலப்பொருட்கள் மற்றும் இந்தியாவில் எலக்ட்ரானிக்ஸ், டெலிகாம் மற்றும் பவர் போன்ற வேகமாக வளர்ந்து வரும் துறைகளின் தேவையை பூர்த்தி செய்ய பயன்படுத்தப்படுகின்றன.

உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கவும், இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைக்கவும், செயலில் உள்ள மருந்துப் பொருட்கள், டெலிகாம் மற்றும் நெட்வொர்க்கிங் கருவிகள், சோலார் பிவி தொகுதிகள், பெரிய அளவிலான எலக்ட்ரானிக் உற்பத்திகள், தயாரிப்புகள் உள்ளிட்ட 14 துறைகளில் உற்பத்தி இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை (பிஎல்ஐ) திட்டத்தை இந்திய அரசு தொடங்கியுள்ளது.

பொருட்களுக்கான முதலீடுகளை ஈர்ப்பதன் மூலமும், வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலமும், ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலமும் இந்தத் திட்டங்கள் ஏற்கனவே முடிவுகளைக் காட்டத் தொடங்கியுள்ளன.

தரமற்ற இறக்குமதியை சரிபார்க்க பல்வேறு பொருட்களுக்கான தரக் கட்டுப்பாட்டு உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

நியாயமற்ற வர்த்தகத்திற்கு எதிரான வர்த்தக தீர்வு நடவடிக்கைகள் வர்த்தக தீர்வுகளுக்கான பொது இயக்குநரகம் பரிந்துரைக்கிறது.

மேக் இன் இந்தியா, ஸ்டார்ட் அப் இந்தியா, எளிதாக தொழில் செய்வதை ஊக்குவித்தல், பிரதமர் கதி சக்தி தேசிய மாஸ்டர் பிளான் போன்ற உள்நாட்டுத் திறன்களை ஆதரிக்கவும் விரிவுபடுத்தவும் ஒன்றிய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இது புதிய இடங்களுக்கு நமது சந்தை அணுகலை விரிவுபடுத்த உதவும்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக சீனாவுடனான இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை பின்வருமாறு:

2018 - 19 3.74.786.11 கோடி

2019 - 20 3,43,840.37 கோடி

2020 - 21 3,25,282.57 கோடி

2021 - 22 5,46,873.06 கோடி

2022 - 23 6,67,947.14 கோடி

(ஆதாரம்: DGCIS)

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி, சேலம் மாவட்டம், கன்னங்குறிச்சி பேரூராட்சி, மோட்டாங்குறிச்சியில் நடைபெற்ற கால்நடை மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் செ. கார்மேகம் துவக்கி வைத்து பார்வையிட்டார். உடன் சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### 'கொரோனா' காலத்தில் புன்னகை வழியாக எண்ணங்களைப் பிரதிபலித்த

## கன்னியாகுமரி மாவட்டம் - வேலம்மாள் பாட்டி மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!


**சென்னை, ஜூலை 30-**

**'கொரோனா' காலத்தில் புன்னகை வழியாக மக்களின் எண்ணங்களைப் பிரதிபலித்த கன்னியாகுமரி மாவட்டம் - வேலம்மாள் பாட்டி மறைவுற்றார்.**

**அவரது மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.**

முதல்வரின் இரங்கல் செய்தி வருமாறு:-

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த வேலம்மாள் பாட்டி மறைந்தார் என்ற செய்தியறிந்து வருத்தமுற்றேன். கொரோனா பேரிடர் கால நிவாரணமாகக் கழக அரசு வழங்கிய நிவாரணத் தொகையைப் பெற்ற போது, மக்களின் எண்ணங்களைப் பிரதிபலித்த அவரது புன்னகை வழியாக



அவர் என்றும் நம்மிடையே நிலைத்திருப்பார்.

அவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

### சண்.குமரவேல் தலைமை! ச.அசோக் (எ) மோதிலால் வரவேற்புரை!

## மங்கலம் தொகுதியில் கலைஞர் நூற்றாண்டுப் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

### திண்டுக்கல் ஐ.லியோனி - இரா.சிவா சிறப்புரை!

புதுச்சேரி, ஜூலை 30 -

புதுச்சேரி மங்கலம் தொகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும்பொதுக்கூட்டம் அரியூர் அங்காளம்மன் கோவில் எதிரில் நடைபெற்றது. மாநில தலைமைச் செயற்குழுஉறுப்பினர்சண்.குமரவேல்தலைமைதாங்கினார். தொகுதி செயலாளர் ச. அசோக் (எ) மோதிலால் வரவேற்புரை ஆற்றினார். பொதுக்குழுஉறுப்பினர்அ. சோமசுந்தரம், கா. பரமபதம், முருகதாஸ், அவைத்தலைவர் சே. புஷ்பராஜ், துணைச் செயலாளர் க. ஐய்யனார், மகளிர் அணி எம். புஷ்பலதா, ச. பாக்கியலட்சுமிசாரங்கம், க.கவிதாகண்ணியப்பன், பொருளாளர் டி.எம்.எஸ். (எ) வே. தட்சிணாமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் தி.மு.க. கொள்கைப் பரப்புச் செயலாளர்,தமிழ்நாடுபாடநூல் கழகத்தலைவர்திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை ஆற்றினார்.

அப்போது, பிரதமர் மோடிஉளுந்தேஇல்லாமல் ஆயிரம் வடை சுடக் கூடிய டுபாக்கூர். இவர்தமிழ்நாட்டில் தமிழக மக்களை தன்வசம் இருப்பதற்காக திருக்குறளை வாசிக்கிறார். மோடியின் இந்த செயல் தமிழ்நாட்டில் நடக்காது. இதேபோன்று ஆளுநர் ரவியும் செய்து வருகிறார். புதுச்சேரி ஆளுநரின் தலையாட்டிப் பொம்மையாக ரங்கசாமி உள்ளார். ஆனால் தமிழ்நாடு முதல்வர்இவரை போல் இல்லாமல் தன்மானம் மிக்கவராக உள்ளார். கடந்த 9 ஆண்டுகளாக நாட்டை பா.ஜ.க. நாசமாக்கி விட்டது. என்.டி.ஏ. கூட்டணி துரோகிகளின் கூட்டணி. இதற்கு மோடி தான் தலைவர். இந்தியா கூட்டணி நாடு முழுவதும் ஆட்சி அமைக்கும். அண்ணாமலையை கர்நாடகாவில் விரட்டி அடித்தது போல் தமிழ்நாட்டிலும் விரட்டியடிப்பார்கள்.

தமிழ்நாட்டில் திராவிட மாடல்ஆட்சிபெண்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றைக்காப்பாற்றுவதுபெண்கள்தான். புதுச்சேரியிலும் உதயசூரியன் ஆட்சி அமைத்து திராவிட மாடல் ஆட்சி நடக்கும். தமிழ்நாட்டைச்சேர்ந்ததமிழ்ப்பெண்மணி புதுச்சேரி ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் தமிழ்நாடுபாடநூலைநீக்கிவிட்டு சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தை அமல்படுத்தி துரோகம் செய்துள்ளார். இவர்ஒருதமிழினத்துரோகி. இந்ததுரோகத்துக்கு முடிவு கட்ட புதுச்சேரியில்தி.மு.க. ஆட்சி அமைய வேண்டும். வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் 40 க்கு 40 வெற்றி பெற்று இந்தியா கூட்டணி ஆட்சி அமைக்கும்.

இவ்வாறு திண்டுக்கல் லியோனி பேசினார்.

இரா.சிவா பேச்சு!

முன்னதாக புதுச்சேரி மாநிலதி.மு.க.அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா பேசும்போது,

புதுச்சேரியில் மிக மோசமான பாவப்பட்ட ஆட்சி நடைபெற்று வருகிறது. மக்களை ஏமாற்றக் கூட கூடிய செயல்களை செய்ய வேண்டாம். தமிழகத்தில் 6 முதல் 12ம். வகுப்பு வரை அரசு பள்ளி படிக்கும் மாணவர்களுக்கு மருத்துவ படிப்பில் 7.5% உள் ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் புதுச்சேரியில் ஒன்றாம் வகுப்பு 10ம் வகுப்பு வரை அரசுபள்ளிபடிக்கும்மாணவர்களுக்குதான்மருத்துவக் கல்லூரியில் 10% இடம் ஒதுக்கி வழங்கப்படும் என கூறுகிறார். இதற்காக நாங்கள் இன்னொரு குழந்தையைபெற்றுக்கொண்டா படிக்க வைக்க முடியும்.

இவ்வாறு இரா.சிவா பேசினார்.

தொடர்ந்துஏழை,எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இந்தபொதுக்கூட்டத்தில் அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், முன்னாள் எம்.பி., சி.பி. திருநாவுக்கரசு, மாநில துணை அமைப்பாளர்வி.அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., கழகப்பொருளாளர்இரா.செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல்.சம்பத் எம்.எல்.ஏ.,ஆகியோர்பேசினர்.

இதில்,துணைஅமைப்பாளர்கள் ஏ.கே. குமார், அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள்சட்டமன்றஉறுப்பினர்பூ.மூர்த்தி, கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப.காந்தி, டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் வெ.ராமசாமி, ப.செல்வநாதன், எஸ். தர்மராஜன், பா.செ.சக்திவேல், ந.தங்கவேலு, சி. கோபால், வே. கார்த்திகேயன், பெ. வேலவன், ஆர். கோகுல், ஆர். ரவீந்திரன், டி.செந்தில்வேலன், ப.இளம்பரிதி, பெ.பழநி, மு.பிரபாகரன், மற்றும் கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள் பங்கேற்றார்கள்.

கூட்டத்தின்முடிவில்அரியூர். பா. ஏழுமலை நன்றியுரை ஆற்றினார்.



மணிப்பூரில் நடந்த கொடுமைகளுக்காக ஒன்றிய அரசைக் கண்டித்து, தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் அதன் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில் 27.7.2023 அன்று மாலை, சென்னை, ராஜரத்தினம் மைதானம் அருகில் காயக்கட்டு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் சென்னை மாவட்ட த.பெ.தி.க. மாவட்டச் செயலாளர் குமரன், ஊடகப் பிரிவுச் செயலாளர் ஜனா விஜய் உட்பட 50க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

### சென்னையில் நடைபெற்றது! - மணிப்பூர் கொடுமைகளைக் கண்டித்து

## தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் காயக்கட்டு ஆர்ப்பாட்டம்!

### பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில்!

சென்னை, ஜூலை 30-

சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகில் மணிப்பூர் வன்முறை மற்றும் பெண்கள் மீது வன்கொடுமை சம்பவத்தை தடுக்க தவறிய ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றும் மணிப்பூர் மாநில அரசைக் கண்டித்து தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் 27.7.2023 அன்று மாலை 4 மணியளவில் காயக்கட்டு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்றும் மணிப்பூர் கலவரத்தை பிரதமர் மோடி அரசு மறைத்து வருகிறது என்றும் மணிப்பூர் மக்களுக்கு துணை நிற்போம் என்றும் முழக்கங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதில் செய்தியாளர்களிடம் தந்தை பெரியார் திராவிடர் கழக பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன்கூறியதாவது:

மணிப்பூர் மக்களைப் பிளவுபடுத்தி கலவரங்களை உருவாக்கிவிட்டு பா.ஜ.க. அரசு வேடிக்கை பார்த்து வருகிறது.

வாக்கு வங்கிகளாக இரண்டு சமூகத்தைப் பயன்படுத்திய பா.ஜ.க. அரசு, தற்போது மணிப்பூரில் பெண்கள் அமைதியாக வாழமுடியாத சூழலை உருவாக்கி உள்ளது. இந்த நிலைகண்டு உலகமே பிரதமர் மோடி அரசை விமர்சனம் செய்து வருகிறது.

மே 4 ஆம் தேதி நடந்த பெண்களுக்கு எதிரான கொடூரச் சம்பவங்கள் தற்போது தான் வெளி வந்துள்ளது. மக்கள் மனதை அந்த விவகாரம் சுக்கு நூறாக உடைத்துள்ளது.

எதுவும் தெரியாதது போல பிரதமர் மோடி முதலைக் கண்ணீர் வடித்துள்ளார். மணிப்பூரில் அந்த நிகழ்வு நடந்த அடுத்த நிமிடமே உளவுத்துறை மூலம் அவருக்குத் தெரிந்து இருக்க வேண்டும். ஒன்றும் தெரியாத உத்தமர் போல பிரதமர் மோடி மக்களை ஏமாற்றுகிறார். தேர்தல் ஆதாயம் கிடைக்கும் என்று தப்புக் கணக்கு போடும் பிரதமர் மோடிக்கு 2024 ஆம் ஆண்டு தேர்தலில் மிக பெரிய அடி விழும்.

தமிழ்நாட்டில் மணிப்பூர் மக்களுக்கு ஆதரவாக தந்தை பெரியார் திராவிடர் கழகம் என்றும் துணைநிற்கும்.

பிரதமர் மோடி ஆட்சி வந்த காலம் முதல் என்ன நடந்தாலும் பத்திரிகையாளர்களை சந்திக்காத அவர் மணிப்பூர் விவகாரத்தில் முதன் முதலாக பத்திரிகையாளர்களை சந்தித்து பேட்டி கொடுத்தார்.

ஆனால் அது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வந்து பேச பிரதமர் மோடி அஞ்சுகிறார். அப்படி என்றால் அவர் ஏதோ தவறு செய்து இருக்கிறார்.

எதிர்கட்சிகள் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்தது என்பது மக்களுடைய நிலையை கூறுவது தான்.

இரண்டு விசயங்களை மனதில் வைத்து மோடி அரசு மணிப்பூரில் கலவரத்தைத் தூண்டி விட்டுள்ளது.

ஒன்று, அவர்களை வாக்கு வங்கிகளாக பயன்படுத்துகிறார்.

இரண்டாவது, பழங்குடியின மக்கள் நிலங்களை கார்பொரேட் நிறுவனங்களுக்குத் தாரைவார்க்க மோடி அரசு முயற்சித்து வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

சென்னை மாவட்ட செயலாளர் குமரன், ஊடகப்பிரிவு செயலாளர் ஜனா விஜய் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்டவர்கள், இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

### தி.மு.க. மாணவர் அணி

## கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

### சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளராக அ.அருண்காந்த், எம்.எஸ்.சி., எல்.எல்.பி., (5/81ஏ, சடையன்குளம், திருப்பதிசாரம் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் - 629 901) அவர்கள் நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட துணை அமைப்பாளர்கள் இவருடன் இணைந்து பணியாற்றுவார்கள்.

| | |
|---|---|
| **"அண்ணா அறிவாலயம்"** | **சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.** |
| சென்னை - 18 | செயலாளர் |
| நாள்- 28.7.2023 | தி.மு.க. மாணவர் அணி |